20.04.16

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### மூணாரில் மலர் கண்காட்சி:ஏப்.23-ல் தொடக்கம்

மூணாரில் ஹோட்டல் மற்றும் ரிச்சார்ட் அசோசியேஷன் சார்பில் ஏப்.23-ம் தேதி முதல் வரும் மே 3-ம் தேதி வரை மலர் கண்காட்சி நடைபெறுகிறது.

பழைய மூணாரில் புதுப்பிக்கப்பட்ட ஹைடல் பூங்காவில் நடைபெறும் மலர் கண்காட்சி திடலில் சுற்றுலா பயணிகளை கவரும் அரிய வகை மலர்கள் பூச்செடி சிற்பங்கள், மீன் கண்காட்சி உள்ளிட்டவை இடம் பெறும். கண்காட்சி பொழுது போக்குத் திடலில் சாகச நிகழ்ச்சி மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடைபெறும். கண்காட்சி ஏற்பாடுகளை மூணார் ஹோட்டல் மற்றும் ரிச்சார்டு சங்கம் செய்துள்ளது.

### 92 சதவீத தேயிலைத் தூள் விற்பனை

குன்னூர் தேயிலை வர்த்தகர் அமைப்பின் (சிடிடிஏ) இந்த ஆண்டுக்கான 15-ஆவது ஏலத்தில் 92 சதவீத தேயிலைத் தூள் விற்பனையானது.

குன்னூர் சுற்று வட்டாரப் பகுதிகளில் இருந்து 9.83 லட்சம் கிலோ தேயிலையை விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர்.

இதில், இலை ரகம் 6.71 லட்சம் கிலோவும், டஸ்ட் ரகம் 3.12 லட்சம் கிலோவும் அடங்கும். இந்த ஏலத்தில் உள்நாடு, வெளிநாடு வர்த்தகர்கள் பங்களிப்பு அதிகரித்திருந்ததால் 92 சதவீத தேயிலைத் தூள் விற்பனை செய்யப்பட்டது. இருப்பினும், அனைத்து ரகத்துக்கும் கடந்த வார விலையே நீடித்தது.

அதன்படி, இந்த வார விலை நிலவரப்படி சாதாரண வகை இலை ரகத்தில் ரூ. 60 முதல் ரூ. 70, உயர்வகை ரூ. 100 முதல் ரூ. 140, டஸ்ட் ரகத்தில் சாதாரண வகை ரூ. 82 முதல் ரூ. 87, உயர் ரகம் ரூ. 110 முதல் ரூ. 145 விலை கிடைத்தது. சிடிசி ரகத்துக்கு அதிகபட்சமாக ரூ. 216, ஆர்த்தோடெக்ஸ் ரகத்துக்கு ரூ. 245 விலை கிடைத்துள்ளதாக தேயிலை வர்த்தக மையம் தெரிவித்துள்ளது

## கோடை வெப்பத்திலிருந்து கால்நடைகளைக் காக்கும் வழிமுறைகள்

கோடை வெப்பத்திலிருந்து கால்நடைகளைக் காக்கும் வழிமுறைகளை மாவட்ட ஆட்சியர் என். சுப்பையன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்திருப்பது:

தமிழ்நாட்டில் தற்போது கோடை வெயிலின் தாக்கம் படிப்படியாக அதிகரித்து வருகிறது. கோடை வெயிலானது கலப்பினப் பசுக்களில் பால் உற்பத்தி மற்றும் இனப்பெருக்கத்தைப் பாதிக்கக்கூடும். அனைத்து கால்நடைகளிலும் ஒவ்வாமையை ஏற்படுத்தி, அவற்றின் நோய் எதிர்ப்புத் திறனை பாதிக்கவும் வாய்ப்புள்ளது.

பாலின் அளவு, பாலில் கொழுப்பு மற்றும் கொழுப்பற்ற இதர திடப்பொருட்களின் அளவு ஆகியவை கோடைகாலங்களில் குறைந்துவிடுவதால் பால் உற்பத்தியாளர்களுக்கு லாபம் குறையக்கூடும். கால்நடைகளுக்குச் சரியான கொட்டகை மற்றும் சுற்றுச்சுழலை ஏற்படுத்துவது, அறிவியல் ரீதியான தீவன மேலாண்மை ஆகியவற்றைக் கையாள்வதன் மூலம் கால்நடைகள் மூலம் ஏற்படும் இழப்பைத் தவிர்ககலாம்.

கோடையில் கால்நடைகளுக்குச் சரியான அளவு இட வசதியுடன் கொட்டகை அமைத்து, அதைச் சுற்றி நிழல் தரும் மரங்கள் வளர்ப்பதன் மூலம் கொட்டகைக்குள் நிலவும் வெப்பத்தைத் தணிக்கலாம்.

கொட்டகைக் கூரை அலுமினிய தகடுகளால் அமைத்திருந்தால் உட்புறம் கருப்பு மற்றும் வெளிப்புறத்தில் வெள்ளை வர்ணம் மூலம் உட்புற வெட்பத்தைக் குறைக்கலாம்.

ஓடு மற்றும் ஆஸ்பெஸ்டாஸ் கூரையாக இருந்தால், தென்னை, பனை ஓலைகள், தென்னை நார்க் கழிவு அல்லது உலர்ந்த புற்கள் பரப்பி அதன் மீது நீரைத் தெளித்து பராமரிக்கலாம். கால்நடைகளை பகல் 11 மணி முதல் மாலை 4 மணி வரை வெளியில் மேய்ச்சலுக்கு அனுப்பக்கூடாது.

பசுந்தீவனம் மற்றும் கலப்புத் தீவனம் கொடுக்கும் அளவை அதிகரித்து உலர் மற்றும் நார் தீவனம் அளவைக் குறைக்க வேண்டும். நார் தீவனங்களை சிறுதுண்டுகளாக நறுக்கிக் கொடுக்க வேண்டும்.

உலர் தீவனங்களை வைக்கோல் மற்றும் தட்டை மீது உப்பு அல்லது நாட்டு சர்க்கரை கலந்த நீரைத் தெளித்து பதப்படுத்தி பின் வழங்க வேண்டும்.

பசுந்தீவனத்தில் அதிக புரதச்சத்து கொண்ட குதிரை மசால், முயல் மசால், வேலி மசால் போன்ற பயறு வகை தீவனங்கள் அளிக்க வேண்டும்.

போதிய அளவு பசுந்தீவனம் கிடைக்கவில்லையெனில், மர இலைகள், மரவள்ளிக் கிழங்கு திப்பி போன்ற ஈரப்பதம் அதிகமுள்ள தீவனத்தை அளிக்க வேண்டும்.

பகலில் பசுந்தீவனத்தையும், இரவு நேரங்களில் வைக்கோல் போன்ற உலர்ந்த தீவனத்தையும் ஒரே நேரத்தில் அதிக அளவு அளிப்பதை தவிர்த்து அளவைக் குறைத்து பலமுறை அளிக்க வேண்டும்.

தாது உப்புகளின் இழப்பைச் சரிகட்ட தாது உப்புக் கலவை 50 சதவீதம் அதிகரித்துக் கொடுக்க வேண்டும். மாடுகளுக்கான குடிநீர் தொட்டிகளின்மேல் சூரிய வெப்பம் தாக்காவண்ணம் கூரை அமைத்து, கால்நடைகளுக்கு எப்போதும் குளிர்ந்த குடிநீர் கிடைக்கச் செய்ய வேண்டும்.

கோடை ஒவ்வாமையைத் தணிக்கக்கூடிய மூலிகை மருந்துகள் அல்லது நெல்லிக்காய், துளசி அஸ்வகந்தா போன்ற மூலிகைகளை மாடுகளுக்கு கொடுக்கலாம். தவிர 100-200 கிராம் அசோலாவை தீவனத்தில் கலந்து கொடுக்கலாம்.

கோடையில் கால்நடைகளில் வெப்ப அயர்ச்சி நோய், வெப்ப மடிவீக்கம், இளஞ்சிவப்பு கண்நோய் மற்றும் கல்லீரல் தட்டை புழுக்கள் தாக்க

வாய்ப்புள்ளது. இதைத் தவிர்க்க நேரடி சூரிய ஒளி தாக்கத்திலிருந்து கால்நடைகளைக் காத்து, தினமும் இரு வேளை குளிப்பாட்ட வேண்டும். அதிகாலை மற்றும் மாலையில் தீவனத்தை அதிகரித்து, பிற நேரங்களில் குறைத்துக்கொண்டு அதிக அளவு குளிர்ந்த குடிநீர் அளிக்க வேண்டும். கால்நடைகளைக் குளங்கள், நீர்நிலைகளுக்கு அருகில் வளரும் புற்களை மேயாமலும், தண்ணீர் வற்றிய நீர் நிலைகளில் நத்தைகள் காணப்பட்டால், அத்தண்ணீரை அளிக்காமலும் பாதுகாக்க வேண்டும்.

## இன்றைய வேளாண் செய்திகள்

### பீர் உண்மையும் யூகங்களும்

வெயில் காலத்தில் பீர் அருந்தினால் உடலுக்கு குளிர்ச்சி என்பது உண்மையல்ல. பீர் சில்லென்று பரிமாறப்படுவதால் உடலுக்கு குளிர்ச்சி என்பது வெறும் யூகம் மட்டுமே. பீரில் ஆல்கஹால் இல்லை என்பதும் உண்மையல்ல. இந்திய பீரில் ஆல்கஹாலின் அளவு 5 முதல் 8 சதவீதம் உள்ளது. ஆனால் நமக்கு பீரை அறிமுகப்படுத்திய ஐரோப்பியர்களின் பீரில் 4 முதல் 5 சதவீதம் வரை மட்டுமே ஆல்கஹால்உள்ளது. பீரின் தரம் அதன் கசக்கும் தன்மையால் தான் நிர்ணயம் செய்யப்படுகிறது.

### தையல்காரரும் வாழையிலையும்...

பத்து மாதம் கஷ்டப்பட்டு உருவாக்கப்பட்ட வாழைத் தார் கமிஷன் மண்டியில், பேரம் படியாமல் அடிமாட்டு விலைக்கு போகும்போது பாடுபட்ட விவசாயியின் மனது துடிக்கும். திட்டமிட்டு வாழையை பயிரிட்டால் வெற்றி காணலாம் என்கிறார் காரைக்குடி புதுவயல் கருநாவல்குடி விவசாயி பா.மணி. பகல் நேரத்தில் டெய்லராகவும் காலை, மாலையில் விவசாய வேலையிலும் தீவிரம் காட்டி வருகிறார். 4.5 ஏக்கரில் வாழை, மல்லிகை, மிளகி நெல், சிவப்பு கவுனி என இயற்கை விவசாயம் செய்கிறார். அவர் கூறியது: ஒன்றரை ஏக்கரில் வாழை

சாகுபடி செய்துள்ளேன். 10 மாதம் தண்ணீர் பாய்ச்சி வளர்க்கும் வாழைத்தார் ரூ.200 முதல் ரூ.300 வரை மட்டுமே விலை போகிறது. அதற்கு பதிலாக வாழை இலையை வெட்டி விற்றால் மாதம் ரூ.30 ஆயிரம் சம்பாதிக்கலாம். ஒரு வாழையில் 4 முதல் 5 பக்க கன்றுகள் வரும். இவற்றில் மாதம் 15 இலைகள் உருவாகும். ஐந்து இலை கொண்ட ஒரு அடுக்கு ரூ.30. ஒரு வாழையில் மாதம் ரூ.90 வீதம் பத்து மாதத்தில் ரூ.900 கிடைக்கும். இதன் மடல்கள் ஆடு, மாடுகளுக்கு உணவாகிறது. காய்ந்த இலைகளை அதன் கீழேயே மூடாக்கு போட்டு மட்க வைப்பதால் சிறந்த உரமாக மாறுகிறது. மண்புழு உற்பத்தியும் அதிகரிக்கும்; மண்வளம் பாதுகாக்கப்படுகிறது. வாழையின் மூலம் மட்டும் மாதம் ரூ.30 ஆயிரம் வருமானம் கிடைக்கிறது. இந்த வாழையின் ஊடே சர்க்கரைவள்ளி கிழங்கு பயிரிட்டுள்ளேன். இதற்கு வேலை எதுவும் கிடையாது. தோட்டத்தில் எதையும் எரிக்க கூடாது. மட்க செய்ய வேண்டும். அதேபோல் 140 நாட்கள் கொண்ட பழங்கால ரகமான மிளகி நெல், சிவப்பு கவுனியை இயற்கை முறையில் விவசாயம் செய்கிறேன். 40 சென்டில் மல்லிகை பயிரிட்டுள்ளேன். விவசாயத்தால் நஷ்டம் எதுவும் கிடையாது. ஆர்வமுடன் செய்தால் அளவில்லா லாபத்தை பெறலாம், என்றார். பாராட்ட 73736 38810 – **செந்தில்குமார், காரைக்குடி**

## மண்ணை வெப்பமூட்டணும்!

இன்று பல பகுதிகளில் பயிர் சாகுபடியை சிரமமாக மாற்றுவது களைகளின் பெருக்கம் தான். களை எடுக்காத பயிர் கால் பயிர் என்பர். 100 செடியுள்ள இடத்தில் களைகளை வளரவிட்டால் கால்பங்கு கூட தேறாது. பலவித போட்டிகளில் பயிர் வளர இயலாது. நீர், இடம், சூரியஒளி, சத்துக்கள் இவற்றிற்கு களைகள் போட்டியிட்டு வளரும். களைக்கொல்லிகளை பயன்படுத்தும் போது நிலத்தில் நஞ்சு கலப்பதால் அடுத்த பயிருக்கும் பாதிப்பு தான். நவீன ஆராய்ச்சிகளின் பலனாக பல உத்திகள் வந்துள்ளன. நிலத்தில் 2 செ.மீ., உயரத்திற்கு நீர் நிறுத்தி பாலிதீன் போர்வை மூலம் மூடாக்கு அமைத்தால் மூன்றே நாட்களில் முழுமூச்சாக களைகள் அழியும். அதுமட்டுமல்ல தீமை செய்யும் பலவித

நுண்கிருமிகள், பூஞ்சாண வித்துக்கள், வேர் அழுகல் நோய் உண்டாக்கும் கிருமிகள், நூற்புழுக்கள், கூட்டுப்புழுக்களை அழித்து மண்ணை புது உயிர்த்தன்மை பெற வழிவகுக்கும். பஞ்சபூதங்களின் விளையாட்டான விவசாயத்தில் சூரியஒளி ஒன்றே மூலஆதாரம். பாலிதீன் விரிப்பின் மேல் சூரியஒளி படும்போது நீர் சூடாகி ஒரு அலைசூழல் உருவாக்கப்பட்டு நன்மை கிடைக்கும். கோரை, அருகு, பாதாள பைரவி போன்ற களைகளை கட்டுப்படுத்தும் எளிமையான முறை. தற்போது பாலிஹவுஸ் முறையில் கடைபிடிக்கும் இந்த உத்தியை, அதிக செலவே வராத பாலிதீன் விரிப்பின் மூலம் செய்யலாம். மண்ணை சுத்தப்படுத்தியதும் அதில் நன்மை செய்யும் பூஞ்சாணங்களையும் உயிர்சக்தி தரும் மண்புழு உரம் இடுதல் மிக அவசியம்.
**- சி. இளங்கோ, தோட்டக்கலை உதவி இயக்குனர், ஒழுங்குமுறை மார்க்கெட் கமிட்டி வளாகம், உடுமலைபேட்டை 98420 07125**

## 'பயறு ஒண்டர்' தெரியுமா

இந்தாண்டை சர்வதேச பயறு ஆண்டாக ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது. குறைந்த இலைப்பரப்பு, ஒளிச்சேர்க்கை, இலைகளில் குறைந்த உணவு உற்பத்தி ஆகிய காரணங்களால் பயிர்களின் காய்கள் மற்றும் விதை உற்பத்திக்கு போதுமானதாக இல்லை. இதனால் மகசூல் திறன் குறைகிறது. இவற்றின் மகசூலை அதிகரிக்க ஊட்டச்சத்துக்கள், வளர்ச்சி ஊக்கிகள் கலந்த கலவை தான் பயறு ஒண்டர். பூக்கும் பருவத்தில் இலைகளில் ஒருமுறை தெளித்தால் போதும். இதை தெளித்தால் டி.ஏ.பி., மற்றும் என்.எ.எ., தெளிக்க வேண்டியதில்லை. ஏக்கருக்கு இரண்டு கிலோ பயறு ஒண்டரை 200 லிட்டர் தண்ணீரில் கரைத்து, 200 மில்லி ஒட்டும் திரவம் கலந்து மாலை நேரத்தில் பயிர்கள் நனையும்படி தெளிக்க வேண்டும். இதனால் இலைகள் அதிக நாட்களுக்கு பசுமையாக இருக்கிறது. ஒளிச்சேர்க்கை அதிகரித்து பூக்கள் உதிர்வது குறைந்து 20 சதவீத மகசூல் அதிகரிக்கிறது. இதன் விலை கிலோ ரூ.200. கோவையில் உள்ள வேளாண் பல்கலை பயிர் வினையியல் துறையில்

விவசாயிகள் இதனைப் பெறலாம். போன்: 0422-661 1243
**-கொ. பாலகிருஷ்ணன், பயிர் வினையியல் துறைத்தலைவர், விவசாய கல்லரி, மதுரை.**

## கோடை உழவு அவசியம் விவசாயிகளுக்கு அறிவுரை

வாலாஜாபாத் : 'நெல் பயிரிடாத விவசாயிகள், கோடை உழவு முறையை மேற்கொண்டு பயன் பெறலாம்' என, வேளாண் துணை இயக்குனர் தெரிவித்து உள்ளார்.

வேளாண் உழவர் பயிற்சி நிலைய துணை இயக்குனர் பத்மாவதி கூறியதாவது:சொர்ணவாரி பட்டத்தில், பெரும்பாலான விவசாயிகள் நெல் பயிரிடுவது இல்லை. நெல் பயிரிட விரும்பாத விவசாயிகள், தங்களின் நிலங்களில், கோடை உழவு முறையை மேற்கொள்ளலாம். இந்த உழவு மூலமாக, இயற்கையாக பல நன்மைகளை பெறலாம்.இவ்வாறு அவர் தெரிவித்தார்.

கோடை உழவின் நன்மைகள்

* கோடை உழவு செய்வதால், மழை வரும் போது, நிலத்தில் மழை நீர் தேங்கி நிற்கும்

* புல், பூண்டு ஆகியவை வளர்வது தடுக்கப்படும்

* நிலத்தில் இருக்கும் பூச்சி முட்டைகள் மற்றும் கூட்டுப்புழுக்கள் தடுக்கப்படும்

* இயற்கை மண் வளம் பெருகும்.

## பயன்பாடு அதிகரிப்பு: ஒரு எலுமிச்சை ரூ.11

ராமநாதபுரம்: கோடையில் பயன்பாடு அதிகரித்துள்ளதால் எலுமிச்சை விலை ஜெட் வேகத்தில் எகிறியுள்ளது.

கடந்த ஒரு மாதமாக கோடை வெயில் தாக்கம் நாளுக்குள் நாள் அதிகரித்து வருகிறது. காலை 9 மணிக்கே சுட்டெரிக்கும் வெயில் மக்களை வாட்டி வதைக்கிறது.

வெயிலின் தாக்கத்தை தணிப்பதற்காக தர்ப்பூசணி, சர்பத், இளநீர், பதனீர், போன்ற குளிர்பானங்களை பொதுமக்கள் பயன்படுத்துகின்றனர். பெரும்பாலான வீடுகளில் உப்பு கலந்த எலுமிச்சை சாறை பருகி சூட்டை தணிக்கின்றனர். குளிர்பான தயாரிப்பில் எலுமிச்சை பயன்பாடு தற்போது அதிகரித்துள்ளது. இதனால் இதன் விலையும் அதிகரித்துள்ளது. ராமநாதபுரத்திற்கு மதுரையிலிருந்து எலுமிச்சை பழங்களை மூடை கணக்கில் கொண்டுவந்து விற்பனை செய்கின்றனர். கிலோ ரூ.130க்கு விற்பனையாகிறது. சில்லரை விலையில் 85 கிராம் எடை கொண்ட் ஒரு பழம் ரூ.11க்கு விற்கப்படுகிறது.

கோயம்பேடு காய்கனி மார்க்கெட் உரிமையாளர் கே.யோகின்யா கூறுகையில்," கோடை என்பதால் எலுமிச்சை பழத்தின் தேவை அதிரித்துள்ளது. மதுரையிலிருந்து கொள்முதல் செய்து இங்கு விற்பனை செய்கிறோம். ஒரு பழமாக வாங்கினால் விலை அதிகம் போல் தெரியும் என்பதால் கிலோ ரூ.130க்கு எடை போட்டு விற்கிறோம்," என்றார்.

## வெள்ளரி பிஞ்சு விளைச்சல் அமோகம்

கீழக்கரை: திருப்புல்லாணி அருகே உள்ள மோர்க்குளம், பொக்கனாரேந்தல், ஆனைகுடி, சுமைதாங்கி, சீத்தை உள்ளிட்ட பகுதிகளில் வெள்ளரி பிஞ்சு விளைச்சல் அமோகமாக உள்ளது. இவற்றை ராமநாதபுரம், கீழக்கரை, திருப்புல்லாணி உள்ளிட்ட பகுதிகளுக்கு கொண்டுசென்று விவசாயிகள் மொத்தமாகவும், சில்லரையாகவும் விற்பனை செய்துவருகின்றனர். வெயிலின் தாக்கத்தை தணிக்க வெள்ளரி பிஞ்சுகளை அனைவரும் வாங்கி செல்கின்றனர்.

மோர்க்குளம் விவசாயி முனீஸ்வரி கூறுகையில்," கண்மாய் பகுதிகளில் அதிக அளவில் வெள்ளரி சாகுபடி செய்துள்ளோம். களிமண் பகுதிகளில் வெள்ளரி நன்கு விளையும் தன்மை கொண்டது. அதிகாலை சேகரிக்கப்படும் வெள்ளரி பிஞ்சுகளை வியாபாரிகளிடம் விற்பனை செய்கிறோம், வெள்ளரிப் பழத்துடன் நாட்டுச் சர்க்கரை சேர்த்து சாப்பிட்டால் சுவையாக இருக்கும்," என்றார்.

**மீன் வரத்து, விலை அதிகரிப்பால் நாட்டுப்படகு மீனவர்கள் மகிழ்ச்சி**

ராமநாதபுரம்:மீன்பிடி தடைக்காலம் துவங்கியுள்ள நிலையில் மீன் வரத்து அதிகரித்துள்ளதால் நாட்டுபடகு மீனவர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

கிழக்கு கடல் பகுதியில் மீன் வளத்தை பாதுகாக்கும் விதமாக ஏப்., 15 முதல் மே 29 வரை 45 நாட்களுக்கு விசைப்படகுகள், இழுவலை படகுகள் மீன்பிடிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூார், நாகை, திருவாரூர், தஞ்சை, புதுக்கோட்டை, தூாத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, ராமநாதபுரம் ஆகிய 13 கடலோர மாவட்டங்களில் 11 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விசைப்படகுகள் கடலுக்குள் செல்லாமல் கரையேற்றப்பட்டுள்ளன. நாட்டுப்படகுகள், கட்டுமரங்கள் மட்டுமே மீன்பிடிக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. தமிழகம் முழுவதும் 34 ஆயிரம் கட்டுமரங்கள், 21,400 நாட்டுப்படகுகளில் பல்லாயிரக் கணக்கான மீனவர்கள் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்கள் 3 நாட்டிக்கல் மைல் துாரத்திற்குள் மட்டுமே மீன்பிடிக்கின்றனர். விசைபடகுகள் மூலமான மீன்வரத்து தடைபட்டுள்ளதால் இவர்கள் பிடித்துவரும் மீன்களுக்கு கடும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. இதுபோன்று கரைமடி மீன்களுக்கும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. இதனால் விலை பலமடங்கு அதிகரித்துள்ளதால் மீனவர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**ரூ.11 லட்சத்துக்கு பருத்தி வர்த்தகம்**

ராசிபுரம்: ராசிபுரம், ஆர்.சி.எம்.எஸ்.,ல், 587 பருத்தி மூட்டை, 11 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது. ராசிபுரம் மற்றும் நாமகிரிப்பேட்டை, புதுப்பாளையம், கல்யாணி, தேங்கல்பாளையம், கதிராநல்லூர் உள்ளிட்ட பகுதிகளில், 5,000 ஏக்கரில் பருத்தி சாகுபடி செய்யப்படுகிறது. அறுவடை செய்யப்படும் பருத்தி ரகங்கள், ராசிபுரம் ஆர்.சி.எம்.எஸ்., குடோனுக்கு வாரம் தோறும் திங்கட்கிழமை நடக்கும் ஏலத்துக்கு கொண்டு வரப்படும். நேற்று முன்தினம் நடந்த ஏலத்தில், 587 மூட்டை பருத்தி ஏலத்துக்கு வந்தது. அதன்படி, ஆர்.சி.ஹெச்., குறைந்தபட்சம், 4,596 ரூபாய்,

அதிகபட்சம், 4,950 ரூபாய், டி.சி.ஹெச்., குறைந்தபட்சம், 6,109 ரூபாய், அதிகபட்சம், 6,469 ரூபாய்க்கும் ஏலம் போனது. மொத்தம், 587 மூட்டை பருத்தி, 11 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது.

**இன்றைய வேளாண் செய்திகள்**

## தோட்டக்கலைத்துறை ஆலோசனை எலுமிச்சை செடிகளில் வெள்ளை ஈ தாக்குதலை விரட்ட வழி

வேலார்,:வேலார் மாவட்டக்கில் எலுமிச்சை செடிகளில் வெள்ளை ஈ தாக்குதலை கட்டுப்படுத்த பார்த்தீனிய செடிகளை அகற்ற வேண்டும் என்று தோட்டக்கலைத்துறையினர் தெரிவித்துள்ளனர். வேலூர் மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் கொய்யா, சப்போட்டா, எலுமிச்சை உள்ளிட்டவை பயிரிடப்படுகின்றன. இவை மாவட்டம் முழுவதுமாக பல்வேறு பகுதிகளுக்கு விற்பனைக்காக அனுப்பி வைக்கப்படுகின்றன. இச்செடிகளில் மாவுப் பூச்சி மற்றும் வெள்ளை ஈக்களின் தாக்குதல் அதிகளவில் ஏற்பட்டுள்ளது. இதனால் செடிகளின் கொழுந்துகள் முளைப்புத் தன்மையை இழந்துவிடுகின்றன.

மேலும் காய்கள் பூச்சி தாக்குதலுக்கு ஆளாகி புள்ளிகள் விழுந்து பழங்களாக மாற தகுதியற்றதாகும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. எலுமிச்சை மட்டுமின்றி சப்போட்டா, கொய்யா உள்ளிட்ட மற்ற காய்களும் இதே பாதிப்பிற்கு ஆளாகும் நிலை ஏற்பட்டுள்ளன.

இதுகுறித்து தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் கூறியதாவது: செடிகளில் மாவுப்பூச்சி மற்றும் வெள்ளை ஈ தாக்குதல் ஆரம்ப கட்ட நிலையில் இருந்தால் வேம்பு எண்ணெயை கலந்து அடித்தால் போதுமானது. அதுவே முற்றிய நிலையில் 1 லிட்டர் தண்ணீருக்கு 2 மில்லி புரபனோ பாஸ் கலந்து அடிக்கலாம். அல்லது 10 லிட்டர் தண்ணீருடன் 6 மில்லி இமியோகுளோபிரிட் கலந்து அடிக்கலாம். அல்லது 1 லிட்டர் தண்ணீரில் 2 கிராம் நீட்டோ மைல் கலந்து கைப்பம்பு

மூலம் அடிக்கலாம். பார்த்தீனிய செடிகளின் மூலமே இப்பூச்சி பரவுவதால் விவசாயிகள் இச்செடிகளை உடன் அகற்ற வேண்டும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

## சின்னசேலம் மார்க்கெட் கமிட்டியில் மஞ்சள் விற்பனை துவக்கம்

சின்னசேலம், : சின்னசேலம் வட்டாரத்திற்கு உட்பட்ட 30 கிராமங்களில் விவசாயிகள் மஞ்சள் செடி பயிரிட்டுள்ளனர். அவ்வாறு விளைந்த மஞ்சளை திருச்சி, நாமக்கல், ஈரோடு, சேலம், ஆத்தூர் உள்ளிட்ட பெருநகரங்களில் கொண்டு சென்று விற்பனை செய்கின்றனர். இவ்வாறு வெளியூர் கொண்டு செல்லும்போது போக்குவரத்து செலவு, காலவிரையம், கமிசன் என பலவழிகளில் பாதிக்கப்படுகின்றனர். இதனால் சின்னசேலத்தில் மஞ்சள் சந்தை விற்பனை துவக்க வேண்டும் என்று அரசுக்கும், மாவட்ட நிர்வாகத்திற்கும் விவசாயிகள் கோரிக்கை விடுத்து வந்தனர். இதையடுத்து நேற்று காலை சின்னசேலம் ஒழுங்குமுறை விற்பனை கூட கண்காணிப்பாளர் கலைச்செல்வி மஞ்சள் ஏல விற்பனையை துவக்கி வைத்தார். நேற்று மட்டும் சுமார் 300 மூட்டை மஞ்சள் விற்பனைக்கு வந்திருந்தது. இதுகுறித்து விவசாயிகள் கூறும்போது, இதுநாள் வரை மஞ்சளை ஏற்றிக்கொண்டு மாவட்டம் மாவட்டமாக அலைந்து போக்குவரத்துக்கென செலவு செய்து, நஷ்டத்திற்கு மஞ்சளை விற்று வந்தோம். வெளியூரில் விற்கும் மஞ்சளுக்கு கமிசனும் கொடுக்க வேண்டி உள்ளது. இதையெல்லாம் மாற்றி தற்போது சின்னசேலத்திலேயே மஞ்சள் ஏல விற்பனை துவங்கி உள்ளது மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது. இதனால் மஞ்சளை செலவில்லாமல் விற்பனை செய்கிறோம் என்றனர்.

## 3 கால்களுடன் அதிசய ஆட்டுக்குட்டி

மேட்டூர், : மேட்டூர் அருகே உள்ள பெரியண்ணன் கவுண்டர் நகர் பகுதியைச் சேர்ந்தவர் குழந்தைசாமி. இவர், பட்டி அமைத்து ஆடுகளை வளர்த்து வருகிறார். இதில், ஒரு வெள்ளாடு சினை பிடித்தது. இந்த ஆடு நேற்று முன்தினம் 2 குட்டிகளை ஈன்றது. இதில், ஒரு குட்டிக்கு 3 கால்கள் மட்டுமே இருந்ததை கண்டு குழந்தைசாமி திடுக்கிட்டார். ஆனால், சிறிது

நேரம் தடுமாறியவாறு காணப்பட் அந்த குட்டி, திடீரென துள்ளி குதித்து எழுந்தது. மற்ற குட்டிகளை போல் அங்குமிங்கும் ஓடியது. 3 கால்களுடன் சுற்றித்திரியும் அந்த குட்டியை அக்கம், பக்கத்தினர் ஆச்சரியத்துடன் பார்த்துச் செல்கின்றனர்.

**மாடுகள் விலை உயர்வு**

சேந்தமங்கலம் : நாமக்கல் மாவட்டம் புதன்சந்தையில் நேற்று மாட்டுச்சந்தை கூடியது. கோடை வெயிலின் காரணமாக குறைந்த அளவே மாடுகள் விற்பனைக்கு வந்திருந்தது. கேரளா, பொள்ளாச்சி, கோவை உள்ளிட்ட பகுதிகளிலிருந்து அதிக அளவில் வியாபாரிகள் வந்தனர். ேதவை அதிகரிப்பால், மாடுகளை வாங்க கடும் கிராக்கி ஏற்பட்டது. இதனால் மாடுகளின் விலை உயர்ந்தது. கடந்தவாரம் 30 ஆயிரத்திற்கு விற்கப்பட்ட இறைச்சி மாடு, இந்த வாரம் 32 ஆயிரத்திற்கு விற்கப்பட்டது. இதேபோல 48 ஆயிரத்திற்கு விற்கப்பட்ட கறவைமாடு, 51 ஆயிரத்திற்கு விற்கப்பட்டது. 6 ஆயிரத்திற்கு விற்கப்பட்ட கன்றுக்குட்டி, 5 ஆயிரத்திற்கு விற்கப்பட்டது.

**அரூர் பகுதியில் நுங்கு விைல உயர்வு**

அரூர் : அரூர் பகுதியில் உள்ள பனை மரங்கள் அதிகம் வெட்டப்பட்டதால் நுங்கு வரத்து குறைந்து விலை அதிகரித்துள்ளது. தர்மபுரி மாவட்டம் அரூர் மற்றும் சுற்றுப்பகுதிகளில் பனை மரங்கள் அதிகமுள்ளன. இங்கு ஆண்டுதோறும் மார்ச் மாதங்களில் நுங்கு விளைச்சல் அதிகரித்து விற்பனை களை கட்டும். இந்நிலையில், செங்கல் சூளைக்காக பனைமரங்கள் வெட்டப்படுவது அதிகரித்துள்ளது. இதன் காரணமாக பனை மரங்களின் எண்ணிக்கை வெகுவாக குறைந்து விட்டது. இதன் எதிரொலியாக, நடப்பாண்டில் நுங்கு விளைச்சல் குறைந்து விட்டது. இதன் காரணமாக அரூர் சுற்றுப்பகுதிகளில் நடப்பாண்டு நுங்கு விலை அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டு பத்து ரூபாய்க்கு 4 நுங்குகள் விற்ற நிலையில், தற்போது மூன்று நுங்கு ரூ.10க்கு விற்பனை செய்யப்படுகிறது. கோடை வெயில் கொளுத்துவதால், பொதுமக்கள் விலை உயர்வை பற்றி கவலைப்படாமல் நுங்குகளை ஆர்வத்துடன் வாங்கிச் செல்கின்றனர்.

**உளுந்து சாகுபடி செய்ய வழிமுறை வேளாண் அதிகாரி விளக்கம்**

திருக்காட்டுப்பள்ளி, : பூதலூர் வேளாண்மை உதவி இயக்குநர் பெரியசாமி விடுத்துள்ள செய்திக்குறிப்பல் கூறியிருப்பதாவது: தஞ்சை மாவட்டம் பூதலூர் வேளாண்மை வட்டாரத்தை சேர்ந்த கூத்தூர், விட்டலபுரம், பவனமங்கலம், விஷ்ணம்பேட்டை, அலமேலுபுரம், திருச்சென்னம்பூண்டி, கோவிலடி, தோகூர், கச்சமங்கலம், பாதிரகுடி, பழமார்நேரி, திருக்காட்டுப்பள்ளி, ஒன்பத்துவேலி போன்ற கிராமங்களில் பம்புசெட் மூலம் சித்திரைபட்ட உளுந்து சாகுபடி பணிகளில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். இதற்கு ஏற்றதாக 62 நாள் வயதுடைய கான்பூர் ரகமான ஏடிடி 5 ரகத்தை பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

பயிரின் வளர்ச்சி காலத்தில் விதைகள் மூலம் நோய் பரவாமல் தடுக்க விதை நேர்த்தி செய்ய வேண்டும். பின்னர் ரைசோபியம் என்ற நுண்ணுயிர் உரம் 200 கிராம் எடுத்து அதில் 160 மில்லி ஆறிய அரிசிக் கஞ்சியுடன் கலந்து விதை நேர்த்தி செய்த விதையுடன் கலந்து 24 மணிநேரம் நிழலில் உலர்த்தி வைத்து பின் விதைக்க வேண்டும். 2 அல்லது 3 முறை உழவு செய்து வயலை நன்கு சமப்படுத்தி மக்கிய தொழுஉரம் ஒரு ஏக்கருக்கு 5 டன் வீதம் வயிலில் பரப்பி விட வேண்டும். 30 செமி இடைவெளியில் பாத்தி அமைத்து, செடிக்கு செடி 10 செமி இருக்குமாறு களைக்கொத்து மூலம் கொத்தி 2 விதைகள் இட்டு மண்ணால் மூடவேண்டும்.

ஒரு சதுர மீட்டருக்கு 33 செடிகள் இருக்குமாறு பயிர் எண்ணிக்கை பராமரிக்க வேண்டும். அதிக மகசூல் பெற இது மிக அவசியம். விதைப்பு செய்தவுடன் தண்ணீர் பாய்ச்சி, 3 நாட்கள் கழித்து 2வது தண்ணீர் விடவேண்டும். பின் தேவைக்கு ஏற்ப பூக்கும் தருவாயிலும், காய்க்கும் தருவாயிலும் அவசியம் தண்ணீர் பாய்ச்ச வேண்டும் என்றார்.

## தென்னையை சேதப்படுத்தும் வண்டுகளை அழிக்க! வேளாண் துறையினர் ஆலோசனை

ராமநாதபுரம், : தென்னை மரத்தினை தாக்கி சேதப்படுத்தும் வண்டுகளை கட்டுபடுத்த வேளாண்துறையினர் ஆலோசனை வழங்கியுள்ளனர்.வேளாண் துறையினர் வழங்கியுள்ள ஆலாசனைகள் வருமாறு: இளம், வளரும் பருவத்தில் உள்ள தென்னங்கன்றுகளை காண்டாமிருக வண்டு தாக்கும். இவற்றை எருக்குழியில் காணப்படும் கூட்டுப்புழு, வண்டுகள் போன்றவற்றைப் பொறுக்கி அழிக்க வேண்டும். கார்பாரில் 2 கிராம் நனையும் தூளை ஒரு லிட்டர் தண்ணீல் கரைத்து 3 மாதங்களுக்கு ஒரு முறை எருக்குழியில் தெளிப்பதுடன், வளர்ந்து வரும் புழுக்களை அழிக்க பச்சை மஸ்கார்டின் என்ற பூஞ்சாணத்தை ஊற்றி அழிக்கலாம்.

கவர்ச்சிப் பொறிகளை 2 ஹெக்டேருக்கு ஒன்று வீதம் வைப்பதன் மூலம் வண்டுகளைக் கவர்ந்து அழிக்க முடியும். சிவப்புக் கூன் வண்டு தாக்குதலை ஆரம்ப நிலையில் கண்டிபிடிக்க இயலாது. வண்டுகள் குருத்துப் பகுதிகளில் முட்டையிட்டு நேரடியாக குருத்தினுள் சென்று திசுக்களை உண்பதால் நடுக்குருத்து வாடி, பின்னர் அனைத்து மட்டைகளும் சரிந்து விடுகின்றன. சில நேரங்களில் தண்டுப்பகுதியில் ஏற்படும் காய்களின் மூலம் உள்சென்று திசுக்களை உண்டு, சிறிய துவாரம் வழியாக வெளியேற்றப்படும் கழிவுப்பொருள்கள் மிகுந்த துர்நாற்றத்தை உண்டாக்கும்.

இடி தாக்கிய மரங்கள், கூன்வண்டு தாக்கிய மரங்கள் கடும் பாதிப்பை ஏறுபடுத்தும் வண்டுகளுக்கு வாழ்விடமாக அமைவதால் அந்த மரங்களை அப்புறப்படுத்திட வேண்டும்.கருந்தலைப்புழு தாக்குதலால் கீழ் அடுக்கிலுள்ள மட்டைகள் காய்ந்து பழுப்பு நிறமாகவும், இளமட்டைகள் மட்டும் பச்சையாகவும், தென்படும். தீவிர பாதிப்புக்கு உள்ளான மரங்கள் தொலைவிலிருந்து பார்க்கும் போது கருகியது போன்று காணப்படும். இலைகளின் அடிப்பரப்பில் புழுக்களின் எச்சங்கள் காணப்படும். கருந்தலைப்புழுக்கள் பச்சையத்தைச் சுரண்டி உண்ணும். தாக்குதலைக்

கட்டுப்படுத்த பாதிக்கப்பட்ட இலைகளை வெட்டி எடுப்பதுடன், டைக்குளோர்வாஸ் அல்லது மாலத்தியான் மருந்தை லிட்டருக்கு 2 மில்லி அளவில் கலந்து பாதிக்கப்பட்ட இலைகளில் படும் வகையில் தெளிக்கலாம்.

ஈரியோபைட் சிலந்திப்பூச்சி 2 முதல் 6 மாத குரும்பைகளில் உள்ள காம்பின் அடியில் கூட்டமாகச் சேர்ந்து சாற்றை உறிஞ்சுவதால், குரும்பைகள் உதிர்கின்றன. இரண்டு மூன்று மாத குரும்பைகளில் முக்கோண வடிவில் மஞ்சள் அல்லது பழுப்பு நிறத்திட்டுகளை ஏற்படுத்துகின்றன. இந்த வகைப் பூச்சிகளைக் கட்டுப்படுத்த தாக்கப்பட்ட மரங்களில் ஒரு லிட்டர் தண்ணீரில் அசாடிராக்டின் ஒரு சத மருந்து 5 மில்லி அல்லது வேப்ப எண்ணெய் 30 மில்லி மருந்தை லிட்டருக்கு ஒரு மில்லி ஒட்டும் திரவம் கலந்து ஜனவரி, மார்ச், மே மாதங்களில் 2 முதல் 6 மாத குரும்பைகளில் தெளிக்கலாம். தவிர தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் தென்னை டானிக்கை மரத்துக்கு 200 மில்லி என்ற அளவில் 6 மாத இடைவெளியில் ஆண்டுக்கு 2 முறை வேர் மூலம் செலுத்தலாம். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்றைய வேளாண் செய்திகள்

## ஆன்லைனில் விவசாய விளைபொருட்கள் விற்பனை




சில ஆண்டுகள் முன்புவரை வரப்புகளையும், வாய்க்கால்களையும் கொண்டு நெல், கரும்பு, வாழை என்று பணப்பயிர்களையும், மானாவாரி நிலங்களில் அதாவது மழையை நம்பி விவசாயம் செய்த இடங்களில் தானியவகைகள் என்று பயிரிட்ட விளைநிலங்கள் எல்லாம் இன்று சர்வே கல் மயமாக பொட்டல்காடாகக் காட்சியளிப்பதை எல்லா ஊர்களிலும் பார்க்கமுடிகிறது. பரம்பரை பரம்பரையாக இது எங்கள் சொந்தபூமி என்று பெருமையோடு விவசாயம் செய்துவந்த வேளாண்பெருமக்களெல்லாம், இன்று தங்கள் நிலத்தை விற்றுவிட்டு, வேறுவேலைக்கோ அல்லது வேறுவேலை தெரியாத நிலையில் தங்களுக்குத்தெரிந்த ஒரேவேலையான விவசாயத்தைப் பார்க்கும் விவசாயகூலிகளாகவோ மாறியுள்ள சோகமான நிலை நிலவிக்கொண்டிருப்பதை யாராலும் மறுத்துவிடமுடியாது. இதற்கு

முக்கியக்காரணம், விவசாயம் லாபகரமானதாக இல்லை, போட்டபணம் கிடைக்காமல் கையைப்பிடித்து தொடர்ந்து கடிக்கிறது.

நெருப்பு தணல் கொண்ட குச்சியை யாரால் கையில் பிடித்துக்கொண்டு இருக்கமுடியும்?. கையைச்சுடும்போது கீழே போடவேண்டிய நிலைதானே ஏற்படும்?. அதேபோலத்தான், ஆண்டுதோறும் நஷ்டம் ஏற்பட்டுக்கொண்டே இருந்தால் எப்படி விவசாயத்தை தொடர்ந்து மேற்கொள்ளமுடியும் என்று விவசாயிகள் கேட்பதிலும் நியாயம் இருக்கிறது. அப்படி தொடர்ந்து நஷ்டம் ஏற்படுவதற்கு காரணம் என்ன என்று பார்த்தால், மழை பொய்த்துப்போவது என்பது ஒரு காரணமாக இருந்தாலும், விதை, உரம், பூச்சிமருந்து, விவசாய பணிகளுக்கான சம்பளம் போன்ற பல செலவுகள் உயர்ந்துகொண்டிருக்கும் நிலையில், அதற்கு ஈடுகட்டும் வகையில் விளைபொருட்களுக்கு உரிய விலை கிடைக்காமல் இருப்பதுதான் முக்கிய காரணம். எல்லா பொருட்களுக்கும் உற்பத்தி செய்பவர்களே விலையை நிர்ணயிக்கும்போது, விவசாயிகள் மட்டும் தான் விளைவிக்கும் பொருட்களுக்கு அவர்களே விலையை நிர்ணயிக்க முடியவில்லை. இடைத்தரகர்களும், அந்த விளைபொருட்களை வாங்குபவர்களும் என்னவிலையை சொல்கிறார்களோ, அந்த விலைக்குத்தான் விற்கவேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார்கள். அதிலும் அழுகும்பொருட்களாக இருந்தால் வேறுவழியே இருக்காது. சிலநேரங்களில் விளைநிலங்களில் இருந்து வண்டியைக் கட்டிக்கொண்டோ, வேன், லாரியிலோ, மண்டி அல்லது சந்தை அல்லது மொத்தவியாபாரிகளிடம் எடுத்துக்கொண்டு செல்லும் நிலையில் அவர்கள் கேட்கும் விலைக்குத்தான் கண்டிப்பாக விற்கவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளாகிறார்கள். இப்படிப்பட்ட நிலையில் இருந்து விவசாயிகளைக் காப்பாற்றி, கட்டுப்படியான விலைகிடைக்க வேளாண் விளைபொருட்களை ஆன்லைன் மூலம் விற்கும் புதியமுறையை அறிமுகப்படுத்தியதன் மூலம், விவசாய புரட்சிக்கு பிரதமர் நரேந்திரமோடி வித்திட்டுள்ளார். இதற்காக தேசிய வேளாண் சந்தை இணையதளம் அதாவது ‘ஈ–நம்’ என்ற பெயரில் ஒரு இணையதளத்தை தொடங்கியுள்ளார். இந்த இணையதளம் மூலம் விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை எந்த விலைக்கு?, எங்கு?, எப்போது? விற்கலாம்

என்பதை அறிந்துகொள்ளலாம். எப்படி என்றால், மொத்தவிற்பனை மண்டிகளுக்கும், விவசாயிகளுக்கும் இணையதளம் மூலம் நேரடிதொடர்பு ஏற்பட்டுவிடும். தங்களுக்குத் தேவையான விளைபொருட்களை வாங்க மண்டியில் உள்ள வியாபாரிகளும், விவசாயிகளோடு நேரடி தொடர்புகொள்ளலாம். இதன்மூலம் இடைத்தரகர்களுக்கு வேலை இருக்காது. யார் தனக்கு கட்டுப்படியான விலையைக் கொடுக்கத்தயாராக இருக்கிறார்களோ, அவர்களுக்கே விவசாயியால் தான் விளைவித்த பொருட்களை விற்பனை செய்யமுடியும்.

அப்படி ஆன்லைன் மூலம் விவசாயிகள் விற்பனை செய்யவேண்டுமென்றால், வேளாண் விளைபொருள் விற்பனை குழு சட்டத்தில் திருத்தம் கொண்டுவரவேண்டும். அந்த வகையில், தற்போது 14 மாநிலங்களில்தான் இப்படி ஆன்லைன் வர்த்தகத்தை மேற்கொள்ள முடியும். தமிழ்நாட்டிலும் இந்த முறையை செயல்படுத்த வேண்டுமானால், சில சட்டத்திருத்தங்கள் கொண்டுவரப்படவேண்டும். எனவே, தேர்தலில் வெற்றிபெற்று ஆட்சி அமைக்கும் அரசு, விவசாயிகள் மற்றும் விவசாய விளைபொருட்களை வாங்குபவர்களுடன் கலந்து பேசி சட்டத்தில் திருத்தம் கொண்டுவரவேண்டும். இவ்வாறு ஆன்லைன் முறையை மிகச்சிறிய குறு விவசாயிகளும் பயன்படுத்த தமிழ்நாட்டில் உள்ள 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மின்ஆளுமை சேவை மையங்கள் நிச்சயமாக உதவியாக இருக்கும்.